In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.157/2021 Prosecution witness P.W.10

Name: Tamilmani Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 19-11-2024.

**(Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது திண்டுக்கல்லில் வசிக்கிறேன். மார்க்கெட்டிங் தொழில் செய்கிறேன். சம்பவத்தில் இறந்த சிவக்குமார் எனது நண்பர். அசா9 இறந்து போன சிவாவின் அக்கா. அவர் 10.1.2019 ம் தேதி இரவு 10,10.30 மணியளவில் சிவாவை குத்திவிட்டார்களாம், ஜி.எச்.ல் இருக்கிறானாம் என்ன என்று பாருடா என்று சொன்னார். நான் உடனே திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்றேன். அங்கு சென்று கேட்டபோது சிவா இறந்துவிட்டதை தெரிந்து கொண்டேன். ஆஸ்பத்திரியில் இருந்தவர்கள் காயம்பட்டு இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். அப்போது என்னிடம் ஆஸ்பத்திரியில் இருந்த மருத்துவர் இறந்துபோன சிவாவிற்கு வலது கால் கட்டைவிரல் இருந்ததா எனக் கேட்டார்கள். அதற்கு நான் இருந்தது எனச் சொன்னேன். இறந்துபோன சிவாவிற்கு கட்டை விரல் இல்லாததாலும் அவர் எனக்கு நண்பர் என்பதாலும் என்னிடம் கேட்டார்கள். சிவா வீட்டில் இருந்து எல்லோரும் வந்துவிட்டார்கள். அசா9 இடம் என்ன நடந்தது என நான் விசாரித்தபோது அசா1 சந்தானம், அசா2 ஹரிஹரனும் ஆகிய இருவரும் நாகரத்தினக்கல் வாங்குவது சம்மந்தமாக சிவாவை கூட்டிப்போனதாகவும், சென்ற இடத்தில் கல் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதாகவும், கத்தியை எடுத்து கருஞ்சாமி என்பவர் சிவாவின் முதுகில் குத்தியதாகவும், சந்தானமும் ஹரியும் சிவாவை பைக்கில் தனியார் மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றதாகவும் அங்கு பார்க்க முடியாது என்று கூறியதால் அரசு மருத்துவமனை கூட்டிச் சென்றதாகவும் என்னிடம் சொன்னார். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

10.01.2019 ம் தேதி காலை 11 மணிக்கு சிவக்குமாரை திண்டுக்கல் பஸ்டாண்டில் வைத்து நான் பார்த்தேன்.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.11.19 17:55:31 +0530

Principal District Judge,
Dindigul.